"DINAMALAR"

PAGE NO: 03 DATED: 23.06.2022

# 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க ஜூலை 4ம் தேதி வரை அவகாசம்

**புதுச்சேரி, ஜூன் 23–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்புகளில் சேர்வதற்கான கியூட் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு அடுத்த மாதம் 4ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள முதுநிலை படிப்புகள், டிப்ளமோ படிப்புகள், தேசிய தேர்வு முகமை 'கியூட்' என்ற நுழைவுதேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது.

மாணவர்கள் https://cuet.nta.in என்ற இணையதளத்தில் கடந்த 18ம் தேதி இரவு 11.50 மணி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், கியூட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்க அடுத்த மாதம் 4ம் தேதி மாலை 5.00 மணி வரை காலக்கெடுவை நீட்டித்து, தேசிய தேர்வு முகமை உத்தரவிட்டுள்ளது. விண்ணப்ப கட்டணத்தை 5ம் தேதி இரவு 11.50 மணி வரை செலுத்தலாம்.

விண்ணப்ப படிவத்தில் திருத்தங்களை 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை செய்து கொள்ளலாம். தகவல் குறிப்பேட்டினை www.pondiuni.edu.in டவுண்லோடு செய்து கொள்ளலாம்.

இத்தகவலை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் தெரிவித்துள்ளார்.